மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.13/2014

வாக்குமூலம். பி.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேலு | ஜாதி | |
| த/பெ. | நாகு தேவர் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 73 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 11.08.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வாதி சச்சிதானந்தம் என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டுள்ளார் என்ற விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். தாவா வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். பொய்யாக சொல்லியிருக்கிறார். தாவா சொத்துக்கு என்ன நான்கெல்லை சொல்லியிருக்கிறார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. கூத்தப்பெருமாள் புஞ்சைக்கு வடக்கு, கோவிந்தன் பாகப்புஞ்சைக்கு மேற்கு, ரங்கப்பிள்ளை புஞ்சைக்கு கிழக்கு, நடைபாதைக்கு தெற்கு என்று முதலாவது இலக்க சொத்துக்கு நான்கெல்லை சொல்லியிருக்கிறார் என்றாலும், 2-வது இலக்க சொத்துக்கு கூத்தப்பெருமாள் புஞ்சைக்கு வடக்கு, செல்லத்தம்மாள் புஞ்சைக்கு மேற்கு, நடைபாதைக்கு தெற்கு, சந்திரசேகரன் புஞ்சைக்கு கிழக்கு என்ற நான்கெல்லை கண்டு தான் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். அது தவறானது ஆகும். மேற்கண்ட நான்கெல்லைக்கு உட்பட்ட சொத்தை வாதி அனுபவிப்பத்தில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் மேற்கண்ட நான்கெல்லைக்குள் சொத்து இல்லை. எதனை வைத்து நான்கெல்லைக்குள் சொத்து இல்லை என்று சொல்கிறேன் என்றால் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு வாதி நிலஅளவையருக்கு பணம் கட்டி அளவை செய்தபோது ஒரு சொத்து மட்டும் என் சொத்துக்கு கிழக்கே இருந்தது, மற்றொரு சொத்து பூஸ்துதியில் இல்லை.

2) நானும் எனது மனைவியும், இரண்டு பத்திரங்கள் மூலம் 31 செண்ட் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். என் பெயரில் 8.56 செண்டும், என் மனைவி பெயரில் 6.06 செண்டும் கிரையம் வாங்கினோம். எங்களுக்கு கிரையம் கொடுத்த உண்ணாமலை 31 செண்ட் கிரையம் வாங்கினார். நாங்கள் அவரிடமிருந்து 14 1/2 செண்ட் கிரையம் வாங்கினோம். தாவா புலஎண்ணில் 14 1/2 செண்ட் தான் நான் அனுபவிக்கிறேன் என்றால்

சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு என் கிரைய முன்பாத்தியஸ்தருக்கு தாவா புலஎண்ணில் எவ்வளவு விஸ்தீர்ணம் எந்த நான்கெல்லைக்குள் பாத்தியப்பட்டது என்று தெரிந்துகொண்டு தான் கிரையம் வாங்கினேனா என்றால் என் கிரைய முன்பாத்தியஸ்தரின் நான்கெல்லை எனக்கு ஞாபகம் இல்லை. நான் சரிபார்த்து தான் கிரையம் வாங்கினேன்.

3) நான் ஆசிரியராக பணியாற்றி வந்தேன். பொதுவாக சொத்தை கிரையம் வாங்கும்போது அதன் மூலப்பத்திரத்தை வாங்கிக் கொள்வது வழக்கும் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்தின் மூலப்பத்திரத்தை நான் வாங்கினேனா என்றால் இல்லை. ஏனென்றால் நான் ஒரு பகுதி தான் கிரையம் வாங்கினேன். எனவே ஜெராக்ஸ் நகல் மட்டும் வாங்கினேன். என்னுடைய கிரையப்பத்திரத்தையும், என் முன்பாத்தியஸ்தரின் கிரைய ஆவணங்களையும், வாதியின் பத்திரங்களையும் நீதிமன்ற ஆணையர் மூலம் அளவை செய்து பார்த்ததில் எனக்கு ஆட்சேபனை இருக்கிறதா என்றால் இல்லை.

**வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**